பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆடு கார்த்திகை மீ 25 உ செவ்வாய்க்கிழமை (11 12 1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 15

# ஈழ அகதிகளை பலவந்தமாக மீள அனுப்ப இந்தியா முஸ்தீபு?

## இரு படகுகளில் நூறு பேர் மன்னார்க் கடலில் விடப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிசம்பர் 11

**புதுடில்லியில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் காரணமாக, ஈழத் தமிழர் தொடர்பாக மேலும் கடும் பாதகமான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளக்கூடும் என்று கருதப்படுகிறது.**

**அதன் ஒரு கட்டமாக — தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளை சந்தடி செய்யாமல், பலவந்தமாக, இலங்கைக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கையிலும் இந்தியா ஈடுபட்டிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இவ்வாறு பலவந்தமாக இரண்டு படகுகளில் அனுப்பப்பட்ட சுமார் நூறு ஈழத் தமிழ் அகதிகள் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் மன்னார் கரையை வந்தடைந்தனர் என்றும்—

அவர்கள் தற்போது அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் மன்னாரிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஈழத்தில் அல்லல்பட்டுவரும் அகதிகளை வரவேற்று, ஆதரவளிப்பதாக உலகிற்கு பெரும் பிரசாரம் செய்து கொண்டு—

அதேவேளை —

ஈழ அகதிகளை ஏற்றிவரும் படகுகளை நூற்றுக்கணக்கில் தமிழக கடலோரத்தில் பிடித்து, தடுத்து வைத்தும்,

[ 4 ஆம் பக்கம் பார்க்க]

## சேருவில தாக்குதலில் 2 படையினர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 11

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவிலவில் உள்ள அரிப்பு என்னும் இடத்தில் பாதுகாப்புப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 2 படையினர் உயிரிழந்தனர்.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் இதனைத் தெரிவித்தன.

இதேவேளை - தாக்குதலை அடுத்து எஞ்சிய இராணுவத்தினர் முகாமுக்குத் தப்பி ஓடினர்.

இந்தத் தாக்குதலின்போது இராணுவத்தினரிடமிருந்து ரி 81 ரக எல். எம். ஜி - 1, அதற்குரிய மகஸீன் - 3, ரி56 ரக துப்பாக்கி - 1, அதற்குரிய மகஸீன் - 3, ரவைகள் - 315 என்பன மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ)

## பூந்தோட்டம் ஊடாக அப்பால் செல்லத் தடை

### ஆனால் கொழும்பிலிருந்து வரலாம்

யாழ்ப்பாணம், டிச. 11

கொழும்பிலிருந்து வந்து வவுனியாவில் தங்கியிருந்தவர்கள் பூந்தோட்டம் பகுதி ஊடாக வடக்கு நோக்கிவர படையினர் நேற்று அனுமதி அளித்தனர்.

ஆனால் இங்கிருந்து எவரும் பூந்தோட்டம் ஊடாக வவுனியா நோக்கிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

வவுனியா நகர இணைப்பதிகாரி, இராணுவத் தளபதி ஆகியோரின் 'பாஸ்' பெற்று வருபவர்களுக்கு மட்டுமே பூந்தோட்டம் ஊடாக வடக்கு நோக்கி வர அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் பூந்தோட்டம் பகுதியில் சோதனை என்ற பெயரில் பயணிகளிடமிருந்து பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சோதனைப் பகுதியில் இளம் வயதுடையவர்கள் தாக்கப்படுகிறார்கள்; ஓர் இளைஞன் கண்ணில் கத்திக் குத்துக்கு இலக்கானார். இளம் பெண்களிடம் அத்துமீறல் சேட்டைகள் இடம் பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## சவூதியிலிருந்து வந்த பெண்ணிடம் வவுனியாவில் ரூ. 1லட்சம் அபகரிப்பு!

### தமிழ்க் குழு பறித்தெடுத்தது

யாழ்ப்பாணம், டிச. 11

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பெண்மணி ஒருவரிடம் இருந்து ஒரு லட்சம் ரூபா பணம் வவுனியா நகரில் தமிழ்க் குழு ஒன்றினால் துப்பாக்கி முனையில் பறித்தெடுக்கப்பட்டது.

சவூதியில் இருந்து தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்கு பெரும் ஆவலுடன் வந்த இந்தப் பெண்மணி தாம் பாடுபட்டுத் தேடிக் கொண்டுவந்த முழுப் பணத்தையும் பறிகொடுத்த நிலையில் வெறுங் கையுடன் கடந்த சனியன்று கோப்பாய்க்கு வந்து சேர்ந்துள்ளார்.

சம்பவம் குறித்து அந்தப் பெண்மணி உதயனுக்குக் கூறியதாவது:-

நானும் எனது கணவரும் சவூதியில் வேலை பார்த்து வருகிறோம். எனது பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் கணவரைச் சவூதியில் விட்டு விட்டு நான் தனியாகப் புறப்பட்டு வந்தேன்.

கொழும்பு வந்தவுடன் இங்குள்ள போக்குவரத்துக் கஷ்டங்கள் மற்றும் கெடுபிடிகள் குறித்து அறிந்து கொண்டேன். அதனால் சவூதியில் இருந்து கொண்டுவந்த பொருள்கள் எல்லாவற்றையும் கொழும்பில் விற்றுப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ் நிலைமை குறித்து பிரேமாவுக்கு "கரிசனை"!

யாழ்ப்பாணம், டிச. 11

போர் தொடங்கி ஆறு மாதங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாண மக்கள் மீது ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவுக்கு திடீரென 'கரிசனை' ஏற்பட்டுள்ளது.

அகதிமுகாம்களின் நிலைமை அத்தியாவசியபொருள்களின் தேவைகள், மருந்து மற்றும் முக்கிய தேவைகள் குறித்து ஜனாதிபதி இப்போது விரிவான அறிக்கை ஒன்றை யாழ். அரச அதிபரிடம் இருந்து கேட்டுள்ளார்.

போர் ஆரம்பமானதன் பின்னர் வடபகுதியில் உணவுப் பொருள்கள் மற்றும் தேவைகள் குறித்து அத்தியாவசிய சேவைகள் நாயகமும், கூட்டுப்படைத் தலைமையகமும் இணைந்தே நடவடிக்கை மேற்கொண்டு வந்தன.

ஆனால் இப்பொழுது ஜனாதிபதி அவரது செயலாளர் ஊடாக யாழ். நிலைமை குறித்து அவசரமாக அறிக்கை ஒன்றைக் கேட்டுள்ளார்.

வடக்கு-கிழக்குமாகாணத்திலுள்ள சகல அரச அதிபர்களிடமும் இவ்வாறான அறிக்கைகளை ஜனாதிபதி கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

[ஒ-3]

## யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் ஒரு மாதத்தில் 3,318 பேர் அனுமதி

### 372 பேர் ராணுவ நடவடிக்கையால் காயம்

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ். போதனா ஆஸ்பத்திரி மீண்டும் நகரில் இயங்கத் தொடங்கிய கடந்த ஒரு மாதத்தில் மட்டும் அங்கு சிகிச்சை பெறுவதற்காக 3 ஆயிரத்து 318 பேர் வார்ட்டுகளில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஆயிரத்து 191 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரி புள்ளி விவரங்களில் இருந்து இது தெரியவந்தது.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டவர்களில் 373 பேர் இராணுவ நடவடிக்கையால் காயமடைந்து அல்லது அங்கவீனமான நிலையில் கொண்டு வரப்பட்டவர்கள் என்றும் அந்தப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள சகல பிரிவுகளும் வழமையை விட 50 சத வீதமே இயங்கி [illegible] என்றும்-

மின்சார விநியோகம் முழு அளவில் கிடைக்கவில்லை என்றும்- தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரி கடந்த மாதம் (நவம்பர்) 9 ஆம் திகதி மானிப்பாயில் இருந்து மீண்டும் நகருக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே.

(ஒ-5-6)

## கல்மடு தலைமையாசிரியர் சுட்டுக் கொல்லப்பட்டார்

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்மடு மகா வித்தியாலய தலைமையாசிரியர் யோகநாதன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அன்றையதினம் காலையில் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்கு சென்று கொண்டிருக்கும்போது வழியில் ரெலோவினர் இவரை விசாரணைக்கு எனக் கூட்டிச் சென்றனர் என்றும்-

மாலை 4 மணியளவில் அந்த இடத்தில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கைது!

யாழ்ப்பாணம், டிச 11

கடந்த வியாழனன்று வாழைச்சேனை இராணுவத்தினர் கறைச்சி, தியாகவெட்டுவான் பகுதிகளைச் சுற்றிவளைத்து, அங்கிருந்த 8 பொதுமக்களைக் கைது செய்தனர்.

பின்னர் சுற்றிவளைப்பு முடிந்து போகும் போது கைதானவர்களில் நான்கு பேரை விடுவித்துவிட்டு, மற்றைய நான்கு குடும்பஸ்தர்களைத் தம்முடன் கொண்டு சென்றனர்.

## லொறி தடம்புரண்டது

யாழ்ப்பாணம், டிச. 11

கொழும்பிலிருந்து - அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்குரிய - நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்று பூநகரிக்கும் முழங்காவிலுக்கும் இடையில் தடம் புரண்டது.

நேற்றுப் பகல் 4.10 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் லொறியில் பயணம் செய்த வி. சின்னத்துரை [49 வயது - நீர்வேலி] என்பவர் காயமுற்றார்.

இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிக ளிற்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256 A, பருத்தித்துறை வீதி நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (15000)

### உடன் தேவை

ஆண்களுக்கான ஆடை தைப்பதில் அனுபவம் வாய்ந்த ஆண், பெண் தையல்காரர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்: பவானி காம்ரெக்ஸ் மத்திய சந்தை முன்பாக மானிப்பாய். [15069]

### மலிவு 31 வரை மட்டும்

நீக்கப்படமாட்டாது மீரா வெளியீடுகள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்பவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், கன்னாகம், திருக்கணிதம், சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் லஷ்மி ஸ்ரோர்ஸ். நெல்லியடி [15083]

### (I. A. B. Classes)

Institute of Bookkeepers (London) June 1991 (Exam) foundation Inter and finalsக்கான வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 15-12-1990 வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 12-12-1990 விபரங்கட்கு North Ceylon Technical Institute, 14 st. Peters lane Hospital Road, Jaffna. (C/5543)

### தவறி விட்டது

8-12-90 இரவு வைமன் வீதிக்கும் - பற்றிக்ஸ் வீதிக்கும் இடையில் அடையாள அட்டை, வங்கி அலுவலக அடையாள அட்டை, மற்றும் முக்கிய சில ஆவணங்களுடன் தவறி விட்டது. எடுத்தவர்கள் 39, இராசாவின் தோட்டம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (15084)

### கண்டு எடுக்கப்பட்டுள்ளது

பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தி திருநெல்வேலியில் பெண்களுடைய மணிப்பேஸ் ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் பெற்றுக் கொள்ளவும். க. விக்னேஸ்வரன் தபால் பெட்டி சந்திக் கடை, திருநெல்வேலி. [15080]

### Radio T. V Deck

புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்: 12-12-1990 துரித பயிற்சி நெறி இலகு விளக்கங்கள் செய்முறைப் பயிற்சியுடன் கூடியது. விபரங்கட்கு: North Ceylon Technical Institute, 14, St. Peters Lane, Hospital Road Jaffna (சி/5542)

---

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரம்

பகல்முழுநேரவகுப்பு

# யுனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

(C-5517)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசைக்கலைமணி நாட்டியக்கலைமணி டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பயில்வதற்கான அனுமதி - 1990/1991

மேற்குறித்த பயிற்சி நெறியினை பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளன.

**தகைமைகள்:**

1. பரீட்சார்த்திகள் க. பொ. த (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒருபாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியத்தில் சித்தி பெறாதவர்கள் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4 இல் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. பரீட்சார்த்தி 31-01-1991 அன்று 25 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/- க்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையை நேரில் சமர்ப்பிப்பதன் மூலமோ அல்லது சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 X 10 செ. மீ அளவின தாளுறை கடிதமேலுறையுடன் தபால்மூலமோ, சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 31-01-1991 ஆகும்.

-பதிவாளர்.

(சி-5515)

---

# கண்ணீர் அஞ்சலி

## திரு. A. டொன்பொஸ்கோ
(எழுதுவினைஞர் நகர சபை திருகோணமலை)

சில்லாலையைச் சேர்ந்தவரும், சாவகச்சேரி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, திருகோணமலை உள்ளூராட்சி பணிமனைகளில் பணிபுரிந்து திருகோணமலையில் காலமான, திரு. A. டொன்பொஸ்கோ அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

பண்டத்தரிப்பு.
பட்டினசபை ஊழியர்கள்.

(14686)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 13 - 12 - 1939

விண்ணில்: 22 - 11 - 1989

திதி: 11 - 12 - 1990

## அமரர் பொன்னையா தனபாலசிங்கம்
(வலி கிழக்கு வட. பகுதி ப நோ. கூ. சங்கம் அச்சுவேலி. கிளை முகாமையாளர்)

அன்பின் உருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எம்மையெல்லாம் வழி நடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! கண்ணை இமை காப்பது போல எம்மையெல்லாம் காத்தீரே காலத்தின் கோலத்தால் காலன் உமை அழைத்து, ஆண்டொன்று போனாலும் உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றுமே அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்
தாய், மனைவி, பிள்ளைகள்
உடன்பிறந்தோர், மைத்துனர்,
உற்றார், உறவினர்கள்.

அச்சுவேலி தெற்கு,
அல்பேட் வீதி, அச்சுவேலி. [15085]

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

ஓய்வுபெற்ற சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும் யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களுக்கு அச்சுவேலி நாவற்காடு காட்டுமலைக் கந்தன் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம் தனது நெஞ்சக்கமல கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றது.

நிர்வாகிகள் - உறுப்பினர்கள்

காட்டுமலைக் கந்தன் சி. க. கூ. சங்கம்
நாவற்காடு - அச்சுவேலி.

[15072]

---

யாழ். பல்கலைக்கழகம்

## மகாபொல / உதவிப்பணக் கொடுப்பனவு
(1ஆம், 2ஆம் கொடுப்பனவுகள்)

சிரேஷ்ட (2ஆம், 3ஆம் 4ஆம் வருட மாணவர்கள்) மாணவர்களுக்கான மேற்படி கொடுப்பனவுகளுக்கான ஒழுங்குகள் கீழ் வருமாறு செய்யப்பட்டுள்ளன.

**மகாபொல**

கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, நிர்வாகப் பிரிவு — 1990-12-12 — பி. ப. 2.00

**உதவிப் பணம்**

உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, பௌதிகவியற் பிரிவு — 1990-12-12 — பி. ப. 2.00

**மகாபொல**

உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, பௌதிகவியற் பிரிவு — 1990-12-14 — பி. ப. 1.00

**உதவிப் பணம்**

வர்த்தகப் பிரிவு, நிர்வாகப் பிரிவு — 1990-12-14 — பி. ப. 1.00

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:-

1. மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை
3. உதவிப் பணம் பதிவேடு
4. தேசிய அடையாள அட்டை

[சி-5519]

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



மலர்வு: 22 — 12 — 1944

உதிர்வு: 10 — 11 — 1990

## அமரர் சுப்பிரமணியம் தியாகராசா
(பங்காளர் உமாரேடிங் சென்ரர் கொழும்பு-11)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (11-12-90) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு வீரம்புளியடி கடற்கரையிலும், வீட்டுக்கிருத்திய வைபவம் அன்னாரின் இல்லத்திலும் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் சமூகம் தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

11-11-90 அன்று நடைபெற்ற அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமக்குப் பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் செய்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

3ஆம், வட்டாரம்,
புங்குடுதீவு. [15076]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்
## பயங்கர யோசனை

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடிப்பது என்பார்கள். அதே போல அரசாங்கமும் தமிழர்களை எப்படி எப்படி எல்லாமே 'கடித்து' வருகிறது. அவர்களின் சகல விதமான உரிமைகளையும் மறுத்து அடக்கி ஆள்கிறது. அவர்களை அடிமைகளாகக் கணித்து, கொன்றும், சொந்தப் பூமியில் இருந்து விரட்டியும் வருகிறது.

அவை போதாதென்று, அவர்கள் அனுபவிக்கும் அற்ப சொற்ப சலுகைகளையும் பல்வேறு வகைகளாலும், பல்வேறு துறைகளிலும் பறித்து வருகிறது. அந்த வரிசையில் ஆகப் பிந்தி, வடக்கு-கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தைக் 'கடிக்கும்' முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்கு மாகாணசபை ஒரு தீர்வல்ல. அதற்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. அற்ப சொற்ப அரசியல், நிர்வாக அதிகாரங்கள் மட்டுமே பகிரப்பட்டுள்ளன. நாணயக் கயிறும் மத்திய அரசிடமே உண்டு!

இந்த லட்சணத்தில் அந்த அற்ப சொற்ப சலுகைகள், அதிகாரங்களையும் மத்திய அரசின் வசமாக்கும் திட்டமே, வடக்கு-கிழக்கு மாகாணத்தின் நிர்வாக அதிகாரத்தை தமிழர்களிடம் இருந்து பறித்துச் சிங்கள அதிகாரிகளிடம் கொடுக்கும் புதிய யோசனை.

வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆறு மாதங்களுக்கு முன்னர் கலைக்கப்பட்டது. அதனால் தமிழ்ப் பிரதேசங்களில் மிகப் பெரும் அரசியல் வெற்றிடம் உண்டென்பது உண்மை. அந்த இடைவெளியை சிங்கள அதிகாரிகளைக் கொண்ட குழு மூலம் நிரப்ப முயற்சிப்பது பெரும் பயங்கரமான ஏற்பாடாகும். சனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து சர்வாதிகாரத்தை மேலோங்கச் செய்வதாகும்.

அரசாங்கத்தின் இந்தத் திட்டம் தமிழ்ப் பகுதிகளில் மேலும் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநாட்ட எடுக்கப்படும் சதி என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. யுத்தத்தின் மத்தியிலும் அரசின் ஆதரவுடன் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் வெகு வேகமாக நடந்து வருகிறது. அதனை வலுப்படுத்தி, தமிழர்களை சொந்தப் பூமியில்லாதவர்கள் ஆக்குவதே புதிய திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

தமிழர் பிரச்சினை 42 வருடப் பிரச்சினை. அதனை அமைதி முறையில் தீர்க்க விரும்புவதாகக் கூறிக் கொண்டு, சிங்கள அதிகாரிகளைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிப்பது மேலும் அதனைக் கிளறி ஆழமாக்குவதாகும்.

அரசாங்கம் தமிழர்களைப் பொறுத்த வரையில், எல்லா வழிகளாலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச நினைக்கிறதே அன்றி, புண்ணை ஆற்றுவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதைப் புதிய திட்டம் வெகு துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.

அதேவேளை தமிழர்கள் தங்கள் அடிமைத் தளையை உடைத்தெறிவதற்கு போராடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பதையும் புதிய திட்டம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது.

## ஜனாதிபதியாக வவன்ஸா

போலந்தின் ஜனாதிபதியாக திரு. லெச் வவன்ஸா தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த ஞாயிறு இடம் பெற்ற இரண்டாம் கட்ட வாக்களிப்பில் 75சதவீதமான வாக்குகள் சொலிடாரிட்டி தலைவர் திரு. வவன்ஸாவுக்குக் கிடைத்தன. (இ - எ)

# செயற்கைப் பாதங்களை அனுப்ப கொழும்பு அலுவலகம் பின்னடிப்பு

## படையினருக்குத் தேவைப்படுவதே காரணமாம்

யாழ்ப்பாணம், டிச. 11

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குத் தேவையான செயற்கைப் பாதங்களை அனுப்பி வைப்பதில் கொழும்பில் உள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தலைமையகம் பின் நிற்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனம் செயற்கைப் பாதங்களை அனுப்பி வைக்கும்படி கொழும்பில் உள்ள தலைமையகத்துக்கு விடுத்த கோரிக்கைகள் உருப்படியான பலனை அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் 113 செயற்கைப் பாதங்களை அனுப்பி வைக்கும்படி யாழ்ப்பாணத்தில் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும் ஆனால் 15 செயற்கைப் பாதங்கள் மட்டுமே இதுவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைபெறும் சண்டையில் நூற்றுக்கணக்கில் கால்களை இழந்துள்ள படையினருக்கு செயற்கைக் கால்கள் தேவைப்படுவதனாலேயே தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்தில் செயற்கைக் கால்கள் மட்டும் உற்பத்திசெய்யப்படுகின்றன. கால்களுக்கான பாதங்கள் யாழ்ப்பாணத்திலோ அல்லது கொழும்பிலோ உற்பத்தி செய்யப்படுவதில்லை.

பாதங்கள் ஜெய்ப்பூரில் உற்பத்தி செய்யப்பட்டு நேரடியாகக் கொழும்பில் உள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் உற்பத்தி தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தலைமையகத்தில் இருந்தே யாழ்ப்பாணத்தில் உள்ள ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் செயற்கைப் பாதங்களைப் பெற்று வருகிறது. [இ-6]

## வல்லை வாதரவத்தையில் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், டிச. 11

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வல்லை, வாதரவத்தைப் பகுதிகளில் ஹெலியில் இருந்து சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வீதிகள், வயல்கள், குடியிருப்புகளை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

வல்லை வெளியில் ஹெலி சுட்டபோது அப்பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பலர் சைக்கிளை அப்படியே போட்டு விட்டு மறைவிடங்களை நாடி ஓடினர்.

வாதரவத்தையில் குளை ஏற்றிக் கொண்டிருந்தவர்களை நோக்கியும், குடியிருப்புப் பகுதிகளை நோக்கியும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இச் சம்பவத்தில் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வியாபாரி ஒருவர் சைக்கிளை விட்டு ஓடும் போது விழுந்து காயமடைந்தார் (இ - 15)

## கிளிநொச்சி வேளாண்மை பாதிப்படையும் ஆபத்து

கிளிநொச்சி, டிச. 11

கிளிநொச்சிப் பகுதியில் தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக வேளாண்மை பாதிப்படையும் அபாய நிலைமை தோன்றியுள்ளது.

ஏற்கனவே விதைக்கப்பட்ட வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயிர் அழுகி நாசமடைந்து வருகின்றது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் புதிதாக விதைக்கவும் விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, உர வகைகளுக்கும் இங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அந்த வகையிலும் விவசாயம் பெரும் பாதிப்படையும் என்று சம்பந்தப்பட்டவர்கள் கவலை கொண்டுள்ளனர். (ஒ-76)

## செஞ்சிலுவை அதிகாரி யாழ். வந்தார்

யாழ்ப்பாணம், டிச. 11

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரதிநிதி திரு. பிலிப் கொன்ரசா சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

திரு.கொன்ரசா ஞாயிறன்று யாழ். செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளையும் மற்றும் சில பிரமுகர்களையும் சந்தித்து முக்கிய பேச்சுக்கள் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

# கொழும்பிலிருந்து யாழ். புறப்பட்ட 10 லொறிகளுக்கு நடந்தது என்ன?

## 2 வாரம் கழிந்தும் இன்னும் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், டிச 11

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த பத்து லொறிகள் இன்னும் யாழ்ப்பாணத்தை வந்து சேரவில்லை என்று கூறப்படுகிறது.

அச்சுவேலி தென் மூலையைச் சேர்ந்த செல்வம் என்பவரின் லொறியும் காணாமற்போன லொறிகளில் ஒன்றாகும்.

இத்தகவல் அறிந்து செல்வத்தின் வீடு நேற்று மரண வீடாகக் காட்சி அளித்தது.

இந்த லொறிகள் கொழும்பில் இருந்து புறப்பட்டு ஈரற் பெரிய குளத்தை அடைந்தபோது அப்பகுதி இராணுவ முகாமில் இரு தினங்கள் தடுத்து வைக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டன என்றும்–

பின்பு யாழ். நோக்கி வருகையில் மூன்று முறிப்பு பிள்ளையார் கோவிலில் லொறிகள் தரித்து நின்ற சமயம் அங்கு வந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் பத்து லொறிகளும், அவற்றில் இருந்தோருடன் [சாரதி கிளீனர்) காட்டுப்பக்கமாக கொண்டு செல்லப்பட்டனர் என்றும் நம்பப்படுகின்றது.

லொறிகளை காட்டுக்குள் கொண்டு சென்ற கோஷ்டி இராணுவத்தினராக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது: (இ-15)

## கிழக்கிலங்கை மாணவருக்கு உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச 11

யாழ், பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் கிழக்கிலங்கையைச் சேர்ந்த 115 மாணவர்களுக்கும் நிவாரணம் வழங்குக.

செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையிடம் யாழ். பல்கலைக் கழக நிர்வாகம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மாணவர்கள் தமது பெற்றோரின் உதவி எதையும் பெறமுடியாத நிலையில் இங்கு பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3])

## ரயில் மூலம் வவுனியாவுக்கு விதைநெல் வருகிறது

வவுனியா, டிச.11

வவுனியா மாவட்டத்தில் நிலவும் விதை நெல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய விதைநெல் ரயில் மூலம் கொண்டு வரப்பட இருக்கிறது.

வவுனியா அரச அதிபர் திரு.கே.தர்மலிங்கம் எடுத்த முயற்சியின் பலனாகவே விதைநெல் விவசாயிகளுக்கு கிடைக்க இருக்கிறது.

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனம் மூலம் 500 புசல் விதைநெல் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், மேலும் 2000 புசல் விதைநெல் ரயில் மூலம் கொண்டு வரப்படவிருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு இரண்டு புசல் வீதம் விதை நெல் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [இ-3]

## வடமராட்சி கல்விக் கோட்ட கூட்டம்

யாழ்ப்பாணம், டிச 11

வடமராட்சிக் கல்விக்கோட்டத்தின் கீழ் கடமையாற்றும்–சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாற விண்ணப்பித்த-சகல அதிபர்கள், ஆசிரியர் மற்றும் சிற்றூழியர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் நாளை 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஓ-5)

# உ. அ. அதிபர்பிரிவு தோறும் மத்திய மகாவித்தியாலயம்

## சகல வசதிகளுடனும் நிறுவப்படுமாம்

கொழும்பு, டிச. 11

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒரு பாடசாலை சகல வசதிகளும் கொண்ட மத்திய மகா வித்தியாலயமாக நிறுவப்படும்:

மேற்கண்ட தகவலை கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

அடுத்த வருடம் முதல் மேற்கொள்ளப்படவிருக்கும் மாற்றங்கள் குறித்து அவர் தெரிவித்ததாவது;

★ ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒரு மத்திய மகாவித்தியாலயம் சகல வசதிகளுடனும் அமைக்கப்படும்.

★ 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை 5 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரமாக உயர்த்தப்படும்.

★ தேசிய கல்வி ஆணைக் குழு அமைப்பதற்கான சட்ட மூலம் தயாராகியுள்ளது இந்த சட்டமூலம் ஜனவரியில் நாடாளுமன்றத்துக்கு வரும்.

★ சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை ஒரே முறையில் மாணவர்கள் பயில உதவும் பாடநூல் தயாராகிறது. அடுத்த வருடம் இலவச பாடநூல்களை விநியோகிக்கும்போது மூன்று மொழிகளையும் சேர்ந்த எழுத்தறிவை வழங்கக்கூடிய வழிகாட்டியும் கொடுக்கப்படும்.

★ 5 ஆம் வருடத்தில் எல்லா மாணவர்களுக்கும் மும்மொழிஎழுத்துப் பரீட்சை நடத்தப்படும். (இ:3)

## கிழக்கில் தொடர்ந்து மழை

கொழும்பு, டிச.11

கிழக்கு மாகாணத்தில் மழை தொடர்ந்து பெய்து வருகின்றது. இதனால் பயிர்ச் செய்கை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

காரைதீவு- அம்பாறை வீதியில் சின்னப்பாலம், பெரிய பாலம் ஆகியன வெள்ளத்தில் அமிழ்ந்தும் சேதமும் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஹண்டி பேரின்பநாயகம்

சாந்தமே உருவானாய் நீ
சபைதனில் தலைமை தாங்கி
ஆய்ந்த செம்மொழியிற் பேசி
அருவிருந் தளித்தாய் ஐயா,

காந்தமே போல எம்மைக்
கவர்ந்த நின்நாவும் இப்போ(து)
ஓய்ந்ததே! கல்வி மாதும்
உறுதுணை இழந்தாள் ஐயா!

–செ. வேலாயுதபிள்ளை.

[சிறந்த கல்விமானாக விளங்கிய ஹண்டி பேரின்பநாயகம் அவர்களின் 12 ஆவது நினைவு தினம் இன்றாகும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் ஆசிரியர் தெரிவு; நேர்முகப்பரீட்சை நடக்கும்

தொண்டர் ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சை திட்டமிட்டபடி இம்மாதம் 19 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இந்தத் தகவலை, வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உதயனுச்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 820 பேருக்கு நேர்முகப் பரீட்சைகளை நடாத்த யாழ். கல்வி அலுவலகம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

போட்டிப்பரீட்சை நடத்தப்படவிருப்பதாக வந்த செய்தியையடுத்து கல்விப் பணிப்பாளர் விளக்கம் கேட்டு கொழும்பு அதிகாரிகளுக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார்.

கல்விச் சேவை ஆணைக் குழுவைச் சேர்ந்த அதிகாரி திரு. வல்வித்த, நேற்று பணிப்பாளருக்கு அனுப்பிய பதிலில், போட்டிப்பரீட்சை வெறும் வானொலிச் செய்தி என்றும், நேர்முகப் பரீட்சையை நடத்துமாறும் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து நேர்முகப் பரீட்சையை நடத்தக் கல்வி அலுவலக அதிகாரிகள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் நேரடியாக எதிர்வரும் 17 ஆம் திகதிக்குப் பின்னர் அந்தந்தக் கோட்ட அலுவலகங்களில் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களைப் பெறலாம் என்று பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-3)

# திருமலை, மட்டக்களப்பிலும் நேர்முகப் பரீட்சைகள்

மட்டக்களப்பு, டிச. 11

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிரந்தர நியமனத்துக்காக விண்ணப்பித்த 1450 தொண்டர் ஆசிரியர்களில் 806 பேர் நேர்முகப் பரீட்சைக்கு கல்விச் சேவை ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 600 தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன. (உ-3)

# தமிழகத்தில் மறியல்!

தமிழ்நாடு மாநிலம் எங்கும் இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் மாவட்ட ஆட்சி அலுவலகங்கள் முன்பு மறியல் செய்தனர்.

மலிவு விலை மது விற்பனையை எதிர்த்து போராடியதற்காக கைதாகி காவலில் வைக்கப் பட்டுள்ளவர்களை விடுதலை செய்யக்கோரியும்—

மாநிலத்தில் ஒருமைப்பாட்டைக் குலைக்க எடுக்கப்படும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும் என்று கோரியும் இந்த மறியல் நடத்தப்பட்டது. (உ-எ)

# களை பிடுங்கிய பெண்கள் மீது ஹெலி சரமாரியாக சூடு!

## மட்டுவில் பகுதியில் சம்பவம்

சாவகச்சேரி, டிச. 11

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் சாவகச்சேரி புத்தூர் வீதியில் வண்ணாத்திப் பாலத்துக்கு அருகில் வயலில் களை பிடுங்கிக் கொண்டிருந்த பத்துக்கும் அதிகமான பெண்களை நோக்கி ஹெலிகொப்டர் ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது.

களை பிடுங்கிய பெண்கள் ஓடித்தப்பி அருகிலிருந்த பற்றைக்குள் ஒளிந்து தப்பிக் கொண்டனர்.

நண்பகல் 11 மணியளவில் உ. வேம்பிராய் வீதியில் குழை ஏற்றி வந்த டிரக்டெர் ஒன்றை நோக்கியும் ஹெலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

டிராக்டர் சாரதி வாகனத்தை ஆலமரம் ஒன்றின் கீழ் நிறுத்திவிட்டு குழைஏற்றி வந்த பெட்டியின்கீழ் பதுங்கித் தப்பிக்கொண்டார். [உ-31]

## மலேசியா, பிலிப்பீன்ஸ், இலங்கை:

# சீனப் பிரதமர் குழுவின் சுற்றுப் பயணம் ஆரம்பம்

பீக்கிங். டிச. 11

சீனப் பிரதமர் லீ பெங் ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை நேற்று ஆரம்பித்தார்.

இவருடன் சீன வெளிநாட்டமைச்சர் உட்பட 49 பேர் கொண்ட குழு ஒன்றும் செல்கிறது,

மலேசியா, பிலிப்பீன்ஸ், இலங்கை ஆகிய நாடுகளுக்கும் இக்குழு விஜயம் செய்யும்.

முதற்கட்டமாக இக்குழு நேற்று மலேசியா போய்ச் சேர்ந்தது. [உ-6]


St. John's Church Nursary
Chundikuly

பிரவேச விண்ணப்பம் - 1991

சிறுவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்ப படிவத்தினை பாடசாலை நாட்களில் காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவுத் திகதி:- 21 - 12 - 90

பொறுப்பாளர்

[15086]


# ரயில்வே ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம் டிச.11

ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய ரயில்வேப் பகுதி ஓய்வூதியம் பணமாக வழங்கப்பட உள்ளது.

இந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் தாம் வழமையாக ஓய்வூதியம் பெறும் இலங்கை வங்கிக் கிளைகளுக்கு தத்தமது வவுச்சருடன் சமுகம் அளிக்கும்படி இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் கோரி உள்ளார். [இ]

# மா இறக்காமல் கப்பல் திரும்பியது

கொழும்பு, டிச.11

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விநியோகிப்பதற்கு என 570 மெற்றிக் தொன் மாவுடன் சென்ற ''சிகிரியா'' கப்பல், அங்கு நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மாவை இறக்க முடியாத நிலையில் மீண்டும் திருகோணமலைக்குத் திரும்பியதாக அறிவிக்கப்பட்டது. [உ-6]

# வாழைச்சேனையில் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், டிச. 11

கடந்த முதலாம் திகதி வாழைச்சேனைப் பகுதியில் ரெலோவினராலும், இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்ட சீனித்தம்பி சந்திரசேகரம் [வயது 32] என்ற இருபிள்ளைகளின் தந்தை கடந்த 4 ஆம் திகதி 4.30 மணிக்கு வாழைச்சேனையில் வைத்து ரெலோவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. [உ]

# சவூதியிலிருந்து....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணமாக்கிக்கொண்டேன்

யாழ்ப்பாணம் புறப்படும்போது எனது ''பேர்ஸில்'' ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் பணம் இருந்தது.

வவுனியாவுக்கு ஒருவாறு வந்து சேர்ந்தேன். வவுனியாவில் பல இடங்களிலும் இராணுவத்தினரின் பலத்த சோதனைகள் எல்லாம் முடிந்து, நிம்மதிப் பெருமூச்சுடன் யாழ்ப்பாணம் செல்ல ஆயத்தமானேன்.

திடீரென நகரில் ஓர் இடத்தில் என்னைச் சூழ்ந்து கொண்ட ஆயுதங்கள் வைத்திருந்த தமிழ்க் குழுவினர் என்னிடம் பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர்.

நான் சவூதியில் இருந்து வருவதை அறிந்து கொண்ட அந்தக் குழுவினர், பணத்தை எடுக்கும்படி துப்பாக்கிமுனையில் பயமுறுத்தினர்.

பயந்து நடுங்கிய நான், மறைத்து வைத்திருந்த எனது 'பேர்ஸை' அவர்களிடம் அப்படியே கொடுத்துவிட்டேன்.

பேர்ஸில் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் பணம் ரொக்கமாக இருந்தது. பணத்தைப் பறிகொடுத்த நான் பெரும் ஏமாற்றத்துடன் கோப்பாய் வந்து சேர்ந்தேன் — என்று பெருமூச்சு விட்டபடி கூறி முடித்தார். (ஓ

# ஈழ அகதிகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளை ஏற்றிவரும் படகுகளின் ஓட்டிகளுக்கு இன்னல் விளைவித்தும், ஈழ அகதிகள் தமிழகம் வருவதை மறைமுகமாகத் தடுக்கும் நடவடிக்கைகளில் இந்திய அதிகாரிகள் இதுவரை ஈடுபட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

ஈழ அகதிகள் தமிழகம் வருவதை வெளியுலகிற்குத் தெரியாமல் மறைமுகமாகத் தடுத்துவரும் இந்தியா தற்போது மேலும் ஒருபடி சென்று தமிழகத்தில் இருக்கும் — சுமார் ஒரு லட்சம் — ஈழ அகதிகளைச் சந்தடியின்றி திருப்பி அனுப்ப முனைந்திருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

# பணமாக ஆசிரியர் சம்பளம்; மேலிடம் பதில் இல்லை!

யாழ் மாவட்ட ஆசிரியர்களின் சம்பளத்தைப் பணமாக வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எந்தவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் சம்பளம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'' யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு சம்பளத்தைப் பணமாக வழங்க அங்கீகாரமளித்து, அதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு கோரி —

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு செப்டெம்பர் 29 ஆம் திகதியன்றும், மத்திய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அக்டோபர் 4 ஆம் திகதியிலும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு நவம்பர் 27 ஆம் திகதியன்றும் அனுப்பிய கடிதங்களுக்கு இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

வடமாகாணத்தில் உள்ள ஆறு கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் சம்பளத்தை பணமாக வழங்க அங்கீகாரம் அளிக்குமாறும், கப்பல் மூலம் பணம் எடுத்து வர ஒழுங்கு மேற்கொள்ளுமாறும் யாழ். அரச அதிபர் ஊடாக கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கும் எதுவித பதிலும் இல்லை.

கொழும்பு சென்று இந்த விடயம் சம்பந்தமாக பேச்சு நடத்த கப்பல் மூலம் போக்குவரத்து வசதி செய்து தருமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அவர்களும் போக்குவரத்து ஒழுங்கு செய்ப மறுத்து விட்டனர்- என்றார் அவர். (அ-3)

# சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச.11

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச் சங்கம், யாழ். மாவட்டச் சங்கம், கிளைச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகளின் அவசரக் கூட்டம், நல்லூரில் உள்ள சங்கத் தலைமைப் பணிமனையில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 2-00 மணிக்கு நடைபெறுகிறது. [இ]

# படகுச் சேவை

தாளையடி, டிச. 11

கச்சாயிலிருந்தும் குஞ்சுப் பரந்தனுக்கு புதிய படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரயாணிகள் இப்பாதை ஊடாக படகில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர்.

# 6 மாதங்கள் முடிந்தன

யாழ்ப்பாணம், டிச.11

அரசாங்கப்படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் மூண்டு இன்று ஏழாவது மாதம் ஆரம்பமாகிறது. நேற்றுடன் ஆறு மாதங்கள் முடிவடைந்தன,

கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி மட்டக்களப்பில் இரு சாராருக்கும் இடையில் ஆயுத மோதல் ஆரம்பமாகியது. அதுவே யுத்தத்தின் தொடக்கமும் ஆகும். [அ]

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் குணரத்தினம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதில் உதவிப் பதிவாளர் [நிர்வாகப் பிரிவு] திரு. ஆ. குணரத்தினம் 10-12-90 அன்று காலமானார்.

இவர் காலம்சென்ற ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோபிநாத், பிரேம்நாத், பிரவீணா ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்கம், அன்னம், கமலா [ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவப்பிரகாசம், வேலாயுதபிள்ளை, மகாதேவா, லோகேஸ்வரி, கோடீஸ்வரன், லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-12-90 அன்று நடைபெற்றன. இத்தகவலை உற்றாரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

கைலாசபிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

[14690]

## திருமதி கனகம்மா கணபதிப்பிள்ளை

[உடுவில் தெற்கு]

திருமதி கனகம்மா கணபதிப்பிள்ளை [உடுவில் தெற்கு] காலமானார்.

இவர் உடுவில் தெற்கைச் சேர்ந்தவரும், காலம் சென்ற வே. கணபதிப்பிள்ளையின் மனைவியும், க. தருமராசா [Rt. Meteorlogist], திருமதி ந. தனலட்சுமி ஆகியோரின் தாயாரும், காலம்சென்ற நடராசா [ஓவகியர்], திருமதி த. மனோன்மணி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [11-12-90] பிற்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
க. தருமராசா

[14691]

## திருமதி சர்மிளா தயாளன்

திருமதி சர்மிளா தயாளன் (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பலப்பிட்டி) காலமானார். அன்னார் திரு. நல்லருளானந்தம் தயாளன் (தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், திரு. திருமதி சாள்ஸ் மாணிக்கராசா பெனடிக்ற் அவர்களின் மகளும் (10, லக்சுமி காடின்ஸ், பொரளை), திரு. திருமதி க. நல்லருளானந்தம் அவர்களின் மருமகளுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை கொழும்பில் நடைபெற்றது.

தகவல்:
க. நல்லருளானந்தம்
மெதடிஸ்த குருமனை
அல்வாய்,

26, மெல்டர் பிளேஸ்,
நுகேகொடை.

[15089]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org